விஜயகாந்துக்கு அஞ்சலி

அனைத்து கட்சியினர் அமைதி ஊர்வலம்

விஜயகாந்த் மறைவையொட்டி அனைத்து கட்சி சார்பில் திருப்பூரில் நேற்று அமைதி பேரணி நடைபெற்றது.

திருப்பூர், ஜன.4: விஜயகாந்துக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் திருப்பூர் மாநகர் மாவட்ட தேமுதிக சார்பில் நேற்று நடைபெற்ற அமைதி ஊர்வலத்தில் அனைத்து கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இந்த ஊர்வலகத்திற்கு தேமுதிக மாவட்ட செயலாளர் குழந்தைவேல் தலைமை வகித்தார். திருப்பூர் குமரன் நினைவகத்தில் தொடங்கிய அமைதி ஊர்வலம் குமரன் ரோடு வழியாக வந்து மாநகராட்சி அலுவலகம் எதிரில் நிறைவடைந்தது. அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த விஜயகாந்த் திருவுருவ படத்திற்கு அனைத்து கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து அனைத்து கட்சி நிர்வாகிகள், பொது நல அமைப்பினர் புகழஞ்சலி செலுத்தினர். இதில், திமுக, அதிமுக, கம்யூனிஸ்ட், காங்கிரஸ், தேமுதிக, பார்வர்ட் பிளாக், இந்து முன்னணி, சிவசேனா உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகளும் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

வடமாநில தொழிலாளி தூக்கிட்டு தற்கொலை



ஈரோடு, ஜன. 4: ஜார்கண்ட் மாநிலம் ஜார்கண்ட் நகரை சேர்ந்தவர் பிஷ்ணு(31). இவர் தனது மனைவி சுமியுடன் (24). ஈரோடு மாவட்டம் பெருந்துறை காசிபில்லாபாளையம் மாரியம்மன் கோயில் அருகே தங்கி, பெருந்துறை சிப்காட் அருகே உள்ள மில்லில் லோடு மேனாக வேலை செய்து வந்தார். சுமி தீபாவளி பண்டிகைக்காக ஜார்கண்ட் மாநிலத்திற்கு கடந்த நவம்பர் மாதம் சென்றார். அதையடுத்து பிஷ்ணு மட்டும் வீட்டில் இருந்து, வேலைக்கு சென்று வந்தார்.

சுமி கடந்த 1ம் தேதி இரவு ஜார்கண்டில் இருந்து பிஷ்ணுவிடம் தகவல் கூறாமல் பெருந்துறை வீட்டிற்கு வந்துள்ளார். அப்போது, வீட்டில் பிஷ்ணு மட்டும் அவரது உறவினர் மகன் அஜய் மற்றும் மால்தி ஹன்சா என்ற பெண் ஆகிய 3 பேர் இருந்துள்ளனர். இதைப்பார்த்த சுமி, பிஷ்ணுவிடம் வீட்டில் இருந்த பெண் குறித்து கேட்டு தகராறில் ஈடுபட்டார். இதில், கணவன்–மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து மன வேதனை அடைந்த பிஷ்ணு நேற்று முன்தினம் வீட்டில் பேனில் துப்பட்டாவினால் தூக்கிட்டு தற்கொலைக்கு முயன்றார். இதைப் பார்த்த சுமி மற்றும் அஜய் இருவரும் பிஷ்ணுவை மீட்டு சிகிச்சைக்காக பெருந்துறையில் உள்ள ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு பிஷ்ணு ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

மாணவிகளுக்கு இலவச சைக்கிள்

பல்லடம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் 227 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்களை நகராட்சி தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார் வழங்கினார். இதில், தலைமை ஆசிரியர் சாந்தி, உதவி தலைமை ஆசிரியர் புஷ்பலதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

குப்பை அகற்றியபோது

ஒயர் தீப்பிடித்து எரிந்ததால் ரயில்வே சிக்னல் பழுது

ஈரோடு, ஜன. 4: ரயில்வே சிக்னல் கோளாறு காரணமாக முத்துக்கவுண்டன்பாளையம் ஊராட்சிக்கு ஈரோடு ரயில்வே போலீசார் ரூ.2 ஆயிரம் அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொண்டனர்.

திருச்சியில் இருந்து ஈரோடு வழியாக பாலக்காடு வரை பயணிகள் ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரயில் வழக்கம்போல் திருச்சியில் இருந்து புறப்பட்டு நேற்று முன்தினம் மாலை ஈரோடு சோலார் அருகே உள்ள முத்துக்கவுண்டன்பாளையம் வழியாக ரயில்வே தண்டவாளத்தில் வந்து கொண்டிருந்தது.

அப்போது, அப்பகுதியில் இருந்த சிக்னல் கோளாறு ஏற்பட்டிருந்ததால், ரயிலின் டிரைவர் ஏதோ அசாம்பாவிதம் ஏற்பட்டு விடும் என கருதி ரயிலை அதே இடத்தில் நிறுத்தினார். தொடர்ந்து, எந்த வித சிக்னலும் இல்லாததால் ரயில் புறப்படுவதற்கு தாமதம் ஆனது. இதுகுறித்து தகவல் அறிந்த ஈரோடு ரயில்வே போலீசார் மற்றும் ரயில்வே நிர்வாகத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

இதில், முத்துக்கவுண்டன்பாளையம் ஊராட்சி நிர்வாகம் ரயில் பாதை அருகே குப்பைகள் அப்புறப்படுத்தும் போது, ரயில்வே சிக்னல் ஒயர் தீப்பிடித்து எரிந்து கருகியதால் சிக்னல் கோளாறு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து ரயில்வே தொழில்நுட்ப ஊழியர்கள் சிக்னல் ஒயரை சரிசெய்தனர். எவ்வித பிரச்னையும் இல்லை என்பதை உறுதி செய்தபின் திருச்சி–பாலக்காடு ரயில் சுமார் ஒரு மணி நேரம் காலதாமதமாக சென்றது.

இச்சம்பவம் குறித்து ஈரோடு ரயில்வே போலீசார் வழக்குப்பதிந்து, சிக்னல் கோளாறுக்கு காரணமான முத்துக்கவுண்டன்பாளையம் ஊராட்சி நிர்வாகத்திற்கு ரூ.2 ஆயிரம் அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொண்டனர்.

விபத்து அபாய பகுதிகளுக்கு

‘வாய்ஸ் ரெக்கார்டு’ மூலமாக எச்சரிக்கை

கோவை, ஜன.4: கோவையில் பல்வேறு பகுதியில் அதிகளவு விபத்து நடக்கிறது. நகர், புறநகரில் விபத்து அபாய பகுதிகள் அடையாளம் காணப்பட்டு வருகிறது. இந்த விபத்து பகுதி ‘பிளாக்ஸ்பாட்’ என அடையாளப்படுத்தப்பட்டு அங்கே விபத்தை தவிர்க்கும் வகையிலான செயல்பாடுகளை மேற்கொள்ள போலீசார், வட்டார போக்குவரத்து அலுவலகத்தினர், நெடுஞ்சாலைத்துறையினர் திட்டமிட்டுள்ளனர். சில இடங்களில் அபாய வளைவு, போக்குவரத்து நெருக்கடியான ரோட்டில் இருந்து போக்குவரத்து சீராக உள்ள பகுதிகளில் வாகனங்கள் செல்லும்போது அதிவேகத்துடன் இயங்குவதால் விபத்து ஏற்படுவதாக தெரிகிறது. இரவு நேரத்தில் மட்டுமின்றி பகல் நேர விபத்துகளும் அதிகமாகிவிட்டது.

தவிர்க்க முக்கியமான, அதிக விபத்துக்கள் நடக்கும் இடங்களில் விபத்து அபாயத்தை வாகன ஓட்டிகளுக்கு தெரிவிக்கும் வகையில் ‘வாய்ஸ் ரெக்கார்டு’ வைக்க வட்டார போக்குவரத்து அலுவலகத்தினர் திட்டமிட்டுள்ளனர். போக்குவரத்து இணை கமிஷனர் சிவக்குமரன் மேற்பார்வையில் நகர், புறநகரில் விபத்து அபாய பகுதிகள் அடையாளம் காணப்பட்டு வருகிறது. கோவை, பல்லடம், திருப்பூர், தாராபுரம் ரோடு, அவினாசி ரோடு, பைபாஸ் ரோடு என சில இடங்களில் விபத்து அபாயத்தை அறிவிக்கும் வகையில் குரல் பதிவுடன் கூடிய சிவப்பு விளக்கு அமைக்கப்படும். விபத்து நடக்கும் இடம் மெதுவாக செல்லவும் என அறிவிப்பு குரல் தொடர்ந்து ஒலிக்க வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக 5 இடங்களிலும் பின்னர் மேலும் பல இடங்களிலும் இந்த வாய்ப்பு ரெக்கார்டு அறிவிப்பு வைக்க ஆர்டிஓ அலுவலக அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். விபத்து நடக்கும் பகுதிகளில் விபத்திற்கான காரணங்களை கண்டறிந்து அதை தவிர்க்கும் வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கோவை சரக போக்குவரத்து இணை கமிஷனர் சிவக்குமரன் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு பயிர் சாகுபடி பயிற்சி முகாம்

முத்தூர் அருகே ஊடையம் கிராமத்தில் சிறுதானிய பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது.

வெள்ளக்கோவில், ஜன. 4: திருப்பூர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் சிறுதானிய பயிர்களான சோளம் கம்பு ராகி ஆகிய பயிர்களில் விளைச்சலை பெருக்கும் வகையில் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய ரகங்கள் குறித்து முத்தூர் அருகே ஊடையம் கிராமத்தில் நடைபெற்றது. வெள்ளகோவில் வேளாண்மை உதவி இயக்குனர் பொன்னுசாமி தலைமை தாங்கினார்.

இதில், தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து திட்ட ஆலோசகர் அரசப்பன் கலந்துகொண்டு பேசியதாவது: சிறுதானியங்கள் ஆரோக்கியத்தை பேணும் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கிறது நார்ச்சத்து மிகுதியாக உள்ளதால் இதயத்தின் பராமரிப்புக்கு மிகவும் உதவுகிறது. மலச்சிக்கலை தடுத்து நோயிலிருந்து பாதுகாக்கிறது. சர்க்கரை நோயாளிகளுக்கு சர்க்கரை அளவை ரத்தத்தில் கட்டுப்பாடுடன் வைத்து இருக்கிறது. உடல் வளர்ச்சிக்கு தேவையான தாது உப்புக்கள் மற்றும் வைட்டமின் சத்துக்களை கொடுக்கிறது.

தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்தை பாதுகாப்பு இயக்கம் இத்திட்டத்தின் கீழ் சிறு தானிய உற்பத்தியை பெருக்க பல்வேறு மானிய உதவிகள் விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம் மானியம் என விவசாயிகளுக்கு பயிற்சி விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார். இதில், சிறுதானியங்கள் முக்கியத்துவம், ரகங்கள் ஊட்டம்மேற்றிய தொழு உரம் இடல், உயிர் உரங்கள் உபயோகம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். பல்கலைக்கழக விஞ்ஞானி ரேணுகாதேவி நெல் தரிசில் உளுந்து சாகுபடி குறித்து பேசினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் செல்வகுமார், துணை வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், உதவி வேளாண்மை அலுவலர் சத்தியநாராயணன், அட்மா திட்ட வட்டார மேலாளர் பூங்கொடி ஆகியோர் செய்திருந்தனர்.

கேரள மாநில லாட்டரி சீட்டு விற்றவர் கைது

ஈரோடு, ஜன. 4: ஈரோடு கருங்கல்பாளையம் பார்க் சாலை எல்லை மாரியம்மன் கோயில் அருகே தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுக்கள் விற்பனை செய்வதாக போலீசாருக்கு தகவல் வந்தது. இதன் பேரில், கருங்கல்பாளையம் போலீசார் அங்கு சென்று சோதனை மேற்கொண்டனர்.

அப்போது கேரள மாநில லாட்டரி சீட்டு விற்று கொண்டிருந்த ஈரோடு காவேரி சாலை கந்தசாமி வீதியை சேர்ந்த இப்ராகிம் (34) என்பவர் மீது வழக்குப்பதிந்து, கைது செய்தனர். மேலும், கேரளா லாட்டரி எண்கள் எழுதிய 10 சீட்டுகள், ஒரு செல்போனை போலீசார் பறிமுதல் செய்தனர்.

AA443 குண்டடம் பொதுப்பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கம் லிமிடெட்

கோவை ரோடு, குண்டடம் - 638 702, திருப்பூர் மாவட்டம். போன் : 04258-263289

மகாசபை கூட்ட அறிவிப்பு

அன்புடையீர்

நமது சங்கத்தின் மகாசபை கூட்டம் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசனை செய்து தீர்மானிக்கும் பொருட்டு 11.01.2024 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் குண்டடம் சங்க அலுவலகத்தில் நடைபெற உள்ளதால் சங்க ’அ’ வகுப்பு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய்அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

கூட்டப்பொருள்கள்

1. 2022-2023 ஆம் வருட தணிக்கை அறிக்கையினை வாசித்து அங்கீகரிப்பது தொடர்பான விஷயம்.
2. 2022-2023-ஆம் வருட நிகர இலாபப்பிரிவினை அங்கீகரிப்பது தொடர்பான விஷயம்.
3. 2024-2025 ஆம் வருடத்திற்கான உத்தேச வரவு செலவு திட்டத்தினை அங்கீகரிப்பது தொடர்பான விஷயம்.
4. புதிய ’அ’ வகுப்பு உறுப்பினர்கள் சேர்க்கை விண்ணப்பங்களை பரிசீலித்து அங்கீகரிப்பது தொடர்பான விஷயம்.
5. செயலாட்சியரால் கொண்டு வரப்படும் இதர விஷயங்கள்.

ர.ரமேஷ்குமார்
செயலாளர்

பொ.திவ்யா
செயலாட்சியர்

நாள் : 04.01.2024, இடம் : குண்டடம்

ரூ.1.77 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

கொடுமுடி, ஜன.4: கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று நிலக்கடலைகாய் ஏலம் நடைபெற்றது. இதற்காக கொடுமுடி சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த 10க்கும் மேற்பட்ட விவசாயிகள் 63 நிலக்கடலை காய் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில் குறைந்தபட்சமாக கிலோ ரூ.80.39க்கும், அதிகபட்சமாக கிலோ ரூ.82 69க்கும், சராசரி விலையாக ரூ.82.26க்கும் ஏலம் போனது. இதில், மொத்தம் 21.75 குவின்டால் எடையுள்ள நிலக்கடலைகாய் ரூ.1 லட்சத்து 77 ஆயிரத்து 533க்கு விற்பனை நடைபெற்றது என விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ஜமுனா தெரிவித்தார்.

੧ੴ ਸ੍ਰੀ ਵਾਹਿਗੁਰੂ ਜੀ ਕੀ ਫ਼ਤਹਿ
Punjab & Sind Bank
(A Govt. of India Undertaking)
Where service is a way of life

கிளை: IBD திருப்பூர்,
எண்.118, காமாட்சி அம்மன் கோவில் தெரு,
திருப்பூர்-641 604. PH: 0421- 2248367/2243409.
e-mail: ibd.tirupur@psb.co.in

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்காக)

விதி 8 (1)ன்கீழ் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்ஃபோரஸ்மெண்ட்) விதி 2002

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் பஞ்சாப் & சிந்த் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பிணைக்காப்பு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13 (12) அதற்கு தொடர்புடைய விதிகள் மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 பிரிவு 13(2)-ன் கீழ் கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின் படி கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள கடன்பாக்கித் தொகையை 01.10.2023 முதல் அதற்குண்டான வட்டி, தொகை மற்றும் பிற கட்டணங்களை சேர்த்து, இந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை திரும்ப செலுத்தத் தவறியதால், குறிப்பாக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், அதற்கு தொடர்புடைய விதியின் படியும், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை கீழே கையொப்பமிட்ட அங்கீகாரம் பெற்ற அதிகாரி அவர்கள் **03.01.2024** அன்று சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார்.

இது முதற்கொண்டு குறிப்பாக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதமான பரிவர்த்தனைகளும் வைத்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பரிவர்த்தனைகள் வைத்து கொண்டால் அது பஞ்சாப் & சிந்த் வங்கி, இண்டர்நேஷனல் பேங்கிங் டிவிஷன் கிளை, திருப்பூர்-க்கு செலுத்த வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன்பாக்கித் தொகையை 31.12.2023 முதல் முழு தொகை வசூலாகும் தேதி வரை அதற்குண்டான வட்டி மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

வரிசை எண்.1 **கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் பெயர் : கடன்தாரர்கள்: திருமதி.சுதா.P** க/பெ.திரு.கோவிந்தராஜ்.S **மற்றும் திரு.கோவிந்தராஜ்** த/பெ.திரு.சீனிவாசன், இருவரின் முகவரி : மனை எண்.99, ஸ்ரீ அனுபவ் ரெசிடென்சி, முதலிபாளையம், காங்கேயம் சாலையில் இருந்து, திருப்பூர் - 641 606, **கேட்பு அறிவிப்பு தேதி : 16.10.2023. கேட்பு அறிவிப்பின்படி நிலுவையில் உள்ள தொகை: ரூ.38,02,677.69** மேலும் 01.10.2023 முதல் அதற்குண்டான வட்டி, தொகை மற்றும் பிற கட்டணங்களுடன், **மொத்த நிலுவை தொகை: ரூ.38,99,805.69** (ரூபாய் முப்பத்து எட்டு லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐந்து மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்) மேலும் 31.12.2023 முதல் முழு தொகை வசூலாகும் தேதி வரை வட்டி மற்றும் பிற கட்டணங்கள் சேர்த்து. **சுவாதீனம் எடுத்த தேதி : 03.01.2024**

அசையா சொத்துக்களின் விபரங்கள்: சர்வே புல எண். 399, கதவு எண்.A-99, மனை எண்.99, ஸ்ரீ அனுபவ் ரெசிடென்சி, முதலிபாளையம், காங்கேயம் சாலையில் இருந்து, திருப்பூர் - 641 606 என்ற முகவரியில் உள்ள குடியிருப்பு கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும். பகுதிகளும் மற்றும் எல்லைகள்: சர்வே புல எண்.398-ல் உள்ள நிலத்திற்கு வடக்கே, மனை எண்.98-க்கு தெற்கே, மனை எண்.100-க்கு கிழக்கே, 30 அடி வடக்கு தெற்கு மனை பிரிவு சாலைக்கு மேற்கே. மூலபத்திரத்தின் விவரங்கள் 15.07.2016-தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திர எண். 3112/2016.

வரிசை எண்.2 **கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் பெயர் : கடன்தாரர்கள்: திரு.விஜயன்.K.P.** த/பெ.திரு.பிரகலாதாச்சார், **மற்றும் திருமதி.ராஜலஷ்மி** க/பெ.திரு.விஜயன் K.P, இருவரின் முகவரி : மனை எண்.66, ஸ்ரீ அனுபவ் ரெசிடென்சி, முதலிபாளையம் கிராமம், திருப்பூர் - 641 606, **கேட்பு அறிவிப்பு தேதி : 16.10.2023. கேட்பு அறிவிப்பின்படி நிலுவையில் உள்ள தொகை: ரூ.29,01,421.97** மேலும் 01.10.2023 முதல் அதற்குண்டான வட்டி, தொகை மற்றும் பிற கட்டணங்களுடன், **மொத்த நிலுவை தொகை: ரூ.29,64,805.97** (ரூபாய் இருபத்து ஒன்பது லட்சத்து அறுபத்து நான்காயிரத்து எண்ணூற்று ஐந்து மற்றும் பைசா தொண்ணூற்று ஏழு மட்டும்) மேலும் 31.12.2023 முதல் முழு தொகை வசூலாகும் தேதி வரை வட்டி மற்றும் பிற கட்டணங்கள் சேர்த்து. **சுவாதீனம் எடுத்த தேதி : 03.01.2024**

அசையா சொத்துக்களின் விபரங்கள்: சர்வே புல எண். 399, கதவு எண்.66, மனை எண்.66, ஸ்ரீ அனுபவ் ரெசிடென்சி, முதலிபாளையம் கிராமம், திருப்பூர் - 641 606 என்ற முகவரியில் உள்ள குடியிருப்பு கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும். பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில் : மனை எண்.67, தெற்கில்: மனை எண்.65, கிழக்கில்: 30 அடி வடக்கு தெற்காக சாலை, மேற்கில்: மனை எண்.75. மூலபத்திரத்தின் விவரங்கள் 02.03.2017-தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திர எண். 437/2017.

தேதி : 03.01.2024
இடம் : திருப்பூர்

பஞ்சாப் & சிந்த் வங்கி
(அங்கீகாரம் பெற்ற அதிகாரி)

ஈரோடு சைவ மாரியம்மன் கோயில் குண்டம் விழா

ஈரோடு, ஜன. 4: ஈரோடு வெட்டுக்காட்டு வலசு மாரியம்மன் கோயிலில் நேற்று நடந்த குண்டம் விழாவில் திரளான பக்தர்கள் குண்டம் இறங்கி தீ மிதித்து அம்மனுக்கு தங்களது நேர்த்திக்கடன் செலுத்தினர்.

ஈரோடு வெட்டுகாட்டு வலசில் பிரசித்தி பெற்ற சைவ மாரியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் நடப்பாண்டுக்கான பொங்கல், குண்டம் விழா கடந்த மாதம் 26ம் தேதி பூச்சாட்டு மற்றும் கம்பம் நடும் நிகழ்ச்சியுடன் துவங்கியது. இதனையடுத்து கடந்த 28ம் தேதி பூவோடு வைத்தலும், கடந்த 1ம் தேதி அக்னி கபால ஊர்வலமும் நடந்தது.

நேற்று முன்தினம் பக்தர்கள் காவிரி ஆற்றில் இருந்து பால் குடம், தீர்த்த குடம் எடுத்து ஊர்வலமாக வந்து அம்மனுக்கு அபிஷேகம் செய்து வழிபட்டனர். விழாவின் முக்கிய நிகழ்வான நேற்று காலை குண்டம் விழா நடந்தது. இதில் கோயில் பூசாரி பூ கரகத்துடன் குண்டம் இறங்கினார். இதனைத்தொடர்ந்து, காப்பு கட்டி விரதம் இருந்த திரளான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து குண்டம் இறங்கி, தீ மிதித்து அம்மனுக்கு தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

விழாவையொட்டி சைவ மாரியம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இதையடுத்து கோயில் வளாகத்தில் பெண்கள் பொங்கல் வைத்து, அம்மமை வழிபட்டனர். மேலும், அலகு குத்தியும், அக்னி கும்பம் எடுத்து வந்தும் நேர்த்திக்கடனை செலுத்தினர். இதில் வெட்டுக்காட்டு வலசு மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் தங்களது குடும்பத்தினருடன் கோயிலுக்கு வந்து அம்மனை வழிபட்டு சென்றனர்.

இன்று (4ம் தேதி) கம்பம் அகற்றும் நிகழ்ச்சியும், மாலை சுவாமி வீதி உலா நிகழ்ச்சி நடைபெறுகிறது. நாளை (5ம் தேதி) மறுபூஜையுடன் விழா நிறைவு பெற உள்ளது.

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு விஸ்வேஸ்வரசுவாமி (மற்றும்) வீரராகவப்பெருமாள் திருக்கோயில்கள்

திருப்பூர் வட்டம் (ம) மாவட்டம்
Email: eswarankoiltirupur@gmail.com | website: http://www.tirupureswarankoil.tnhrce.in

பசலி 1433 மறுபொது ஏலம் / டெண்டர் அறிவிப்பு (மூன்றாம் அழைப்பு)

இத்திருக்கோயிலின் பசலி 1433-க்கான (12.01.2024 முதல் 30.06.2024 முடிய) கீழ்கண்ட உரிமங்களுக்கான மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பு இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் அருள்மிகு விஸ்வேஸ்வரசுவாமி திருக்கோயில் வளாகத்தில் நடைபெறும்.

ஏல நாள் : 11.01.2024 **நேரம் : மாலை 03.00 மணி**

வ. எண்	உரிமைகள்	காலம்	ஏல டெபாசிட் தொகை	ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை
1.	பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம்	12.01.2024 முதல் 30.06.2024 முடிய காலத்திற்கு	ரூ.10,000/-	ரூ.100/-
2.	அருள்மிகு வீரராகவப்பெருமாள் திருக்கோயில் முன்புறம் பூஜைப் பொருட்கள் விற்பனை செய்யும் உரிமம்	12.01.2024 முதல் 30.06.2024 முடிய காலத்திற்கு	ரூ.1,00,000/-	ரூ.100/-

மறு பொது ஏல டெபாசிட் தொகை மற்றும் டெண்டர் டெபாசிட் உரிமைக் கட்டணம் ஆகியவை வங்கி வரைவோலையாக மட்டும் செலுத்தப்பட வேண்டும். வரைவோலை **செயல் அலுவலர், அருள்மிகு விஸ்வேஸ்வரசுவாமி (ம) வீரராகவப் பெருமாள் திருக்கோயில், திருப்பூர்** என்ற பெயரில் எடுக்க வேண்டும். ஏலம் மற்றும் டெண்டர் முடிந்தவுடன் அங்கீகரிக்கப்பட்ட ஏலம்/ டெண்டர்தாரர்களை தவிர ஏனையோருக்கு வரைவோலை திருப்பிக் கொடுக்கப்படும். இதர விபரங்கள் திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

திரு.சி.சி.சரவணபவன்
செயல் அலுவலர்

திருமதி.பி.ஜெயதேவி
தக்கார் / உதவி ஆணையர்(கூபொ)

நாள் : 26.12.2023 ; இடம்: திருப்பூர்
வெ.ஆ.எண்: 458. செ.ம.தொ.அ/2024/திருப்பூர் 03.01.2024

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்”

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

(முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே–411036. கிளை அலகு: எண்.5, ஏ பிளாக், இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, விருதம்பட்டு, காட்பாடி பிரதான சாலை, வேலூர்–632004.

மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 19.01.2024 தேதியன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் {A}	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை {B}	சுவாதீனத் தன்மை {C}	சொத்தின் விவரம் {D}	நிர்ணய விலை {E}	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) {F}	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி {G}	ஏல உயர்வுத் தொகை {H}	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் {I}	ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் {J}	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் {K}
1	கடன் எண்: HF/0118/H/20/100223 சுகுமார் (கடன்தாரர்), பிரியதர்ஷினி P (உப-கடன்தாரர்)	அறிவிப்பு தேதி:10.07.2023 மொத்த நிலுவைத் தொகை: 10.07.2023 தேதியின் படி ரூ.15,86,496.89/- (ரூபாய் பதினைந்து லட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூற்று தொன்னூற்று ஆறு மற்றும் பைசா எண்பத்தொன்பது மட்டும் மற்றும் தொகை செலுத்தப்படும் காலம் வரையிலான ஆண்டு 13.25% வட்டிவீதத்திலான வட்டி.	கையக	திருப்பூர் இணை I சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், மங்கலம் கிராமம், ஸ்ரீ காயத்ரி அவென்யூ, திருப்பூர் மாவட்டம், பின்கோடு: 641663, Sf.No.125/1, துணைப்பிரிவு Sf.No.125/1a, Sf.No.125/1b, இல் மனை எண்.15 இன் மேற்கு பகுதி பட்டா எண்.283, 336 இன் படி, அடங்கியுள்ள அனைத்துத் துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய சொத்து.	ரூ.15,81,773/- (ரூபாய் பதினைந்து இலட்சத்து எண்பத்து ஒராயிரத்து எழுநூற்று எழுபத்து மூன்று மட்டும்)	ரூ.1,58,177.30/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று எழுபத்தேழு மற்றும் பைசா மூப்பது மட்டும்)	18.01.2024 மாலை 5.00 மணிக்குள்	ரூ.10,000/-	12.01.2024 (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)	19.01.2024 (காலை 11.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை)	ஒன்றுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.63, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: வினோத் சௌகான், மின்னஞ்சல் முகவரி: delhi@c1india.com, தொடர்பு எண்.9813887931 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.000651000460 மற்றும் IFSC Code– ICIC0000006, 20,R.N. Mukerjee road, Kolkatta–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 18.01.2024 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை எண்.5, ஏ பிளாக், இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, விருதம்பட்டு, காட்பாடி பிரதான சாலை, வேலூர்–632004 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 8588802671 மற்றும் +91 9567626050 மின்னஞ்சல் முகவரி rahul.r1@poonawallahousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

நாள் : 04.01.2024, இடம் : திருப்பூர் **ஓம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)**